செய்திவெளியீடு எண்:357 நாள்: 6.7.2009

## செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் பார்வைத்திறனற்ற பட்டதாரிகளுக்கு கணினியில் பயிற்சி அளிக்க சொல் தொகுத்தல் மற்றும் விரிதாள் ஆகியவற்றில் அதற்குரிய மென் பொருளைக் கொண்டு இலவச பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. சென்னை மாநிலக் கல்லூரியில் இதற்கென ஒரு கணினி மையம் உருவாக்கப்பட்டு இயங்கி வருகிறது. 2009–2010ஆம் கல்வியாண்டில் 10 பார்வைத் திறனற்ற மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட உள்ளனர். இப்பயிற்சியில் சேர விரும்பும் பார்வைத் திறனற்ற மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தினரால் வழங்கப்பட்ட பட்டத்தில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்சியில் பங்குப் பெற விரும்பும் மாணவர்கள் அதற்கான விண்ணப்பப்படிவத்தினை மாநிலக் கல்லூரி (தன்னாட்சி) அலுவலகத்தில் நேரில் இலவசமாக பெற்றுக் கொள்ளலாம். அஞ்சல் வழியில் விண்ணப்பங்களைப் பெற விரும்பும் மாணவர்கள் ரூ.5/– அஞ்சல் வில்லை ஒட்டிய தன் முகவரியிட்ட உறையை இணைத்து கடிதம் அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். பூர்த்திச் செய்யப்பட்ட விண்ணப்பங்களை சென்னை, மாநிலக் கல்லூரி (தன்னாட்சி) முதல்வருக்கு 15.07.2009 மாலை 5.00 மணிக்குள் வந்து சேரும்படி சமர்ப்பிக்க வேண்டும். தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் 20.07.2009 அன்று மாநிலக் கல்லூரியில் வெளியிடப்படும். பயிற்சி தொடங்கும் நாள் குறித்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கல்லூரி முதல்வரால் பின்னர் அறிவிக்கப்படும்.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

***********

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9